**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.116/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | ராகவன் |
| Father's Name/Husband Name: | கணேசன் |
| Village : | மருதடி |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 22 / 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 10.09.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1ம் எதிரி – ஆறுமுகம் 2ம் எதிரி – மல்லிகா ஆஜர்)**

**மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை தொடர்ச்சி :–**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1(i) எங்கள் ஊரை சேர்ந்த தமிழரசியை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி தமிழரசி 2022ம் வருடம் 10ம் வகுப்பு படித்துக்கொண்டு இருக்கும் போது நான் அவரை காதலித்து ஏமாற்றிவிட்டதாக என் மீது புகார் கொடுக்கப்பட்டு அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.34/2022 வழக்கு பதியப்பட்டது என்றால் சரிதான். அது பொய்வழக்காகும். அதன் பேரில் Spl.S.C.No.64/2023 வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். முதல் விசாரணையில் தமிழரசி எனக்கு மெசைஜ் அனுப்பினார் என்று சொல்லிவிட்டு பின்னிட்டு குறுக்கு விசாரணையில் தமிழரசி யார் என்று தெரியாது என்று தன்மூலம் பட்டு சாட்சியம் அளிக்கின்றேன் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தமிழரசி என்ன மெசைஜ் அனுப்பினார் என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். முதல் விசாரணையில் தமிழரசி மெசைஜ் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

(ii). புகாரின் போது எனது செல்போனை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். முதல் விசாரணையின் போது என்னுடைய செல்போனை காட்டி தமிழரசி காட்டிய மெசைஜ் கேட்டார்களா என்றால் கேட்டார்கள். முதல் விசாரணையில் அவ்வாறு சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. தமிழரசி என் மீது கொடுத்த பு காரை வாபாஸ் வாங்க சொல்லி தான் நானும், எனது அம்மாவும், அப்பாவும், சகோதர்களும் அவர்கள் வீட்டிற்கு சென்று கேட்டோம் என்றாலும் தமிழரசி மெசைஜ் அனுப்பியதைப்பற்றி நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு பாடாலூர் போலீஸ் ஸ்டேசனில் பழக்கவழக்கம் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் அந்த பழக்கத்தின் அடிப்படையில் எதிரிகள் என் மீது அளித்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக இந்த புகாரை அளித்து பொய்யாக சாட்சியம் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.
Sd/-

District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.